துளிர்

ரூ. 7.00

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ்

ஆழிசூழ் உலகு





ஜூன் மாத இரவு வான்வரை படம்
10ம் தேதி இரவு 8மணி படி
25ம் தேதி இரவு 7மணி படி
வடக்கு
தமிழ்நாடு அறிவியல் இயக்க வெளியீடு
சே.பார்த்தசாரதி
துருவநட்சத்திரம
சிறுகலப்பை
வியாழம்
வேகா
வைரா
வசிஷ்டர் &
அருந்ததி
பெருங்கலப்பை
(சப்தரிஷி)
சிவிங்கி
புனர்பூசம்
மிதுனம்
ஹெர்குலஸ்
உழவன்
(அவ்வைபுருஷன்)
கிரீடம்
சிறுசிம்மம்
கடகம்
பூசம்
பூரம்
சிம்மம்
சுவாதி
பாம்பின்
தலை
உத்திரம்
மகம்
கிழக்கு
பாம்பாட்டி
சிறுநாய்
ஆயில்யம்
கன்னி
விசாகம்
துலாம்
சித்திரை
நீர்ப்பாம்பு
ஹஸ்தம்
காகம்
அனுஷம்
கேட்டை
தனுசு
விருச்சிகம்
பாய்மரம்
பூராடம்
மூலம்
ஓநாய்
உபயோகிக்கும்
முறை:
முதலில் தெற்கு நோக்கி
நின்றுகொண்டு இப்பக்கத்தினை
தலைக்கு மேலாகப்
பிடித்துக்கொண்டால் வரைபடத்திலுள்ள
திசைகள் சரியாக அமையும்
மகிஷாசுரன்
ஆல்பா
சென்டாரி
தென்சிலுவை
பாய்மரம்
கரினா
வெள்ளி
சனி
செவ்வா
ஜூன் 10 - ஜூலை 9 வரை
வைகாசி 27 முதல் ஆனி 25 வரை
தெற்கு

துளிர்

ஆசிரியர்
ராமானுஜம்

பொறுப்பாசிரியர்
எஸ்.ஜனார்த்தனன்

இணை ஆசிரியர்
ஹரீஷ்

ஆசிரியர் குழு :
பஷீர்
என்.மாதவன்,
எஸ்.மோகனா,
சிவ.மணவழகி
வள்ளியப்பன்,
சி.எஸ்.வெங்கடேஸ்வரன்,
த.வி.வெங்கடேஸ்வரன்,
ஏற்காடு இளங்கோ,
யூமா. வாசுகி

வடிவமைப்பு, வரைவு
பஷீர்
ராஜேஸ்வரி

பதிப்பாளர் :
சி.ராமலிங்கம்
ஆலோசகர் குழு
கமல் லொடயா,
...சுராமன், பொ.இராஜமாணிக்கம்,
...ராமகிருஷ்ணன், சி.இராமலிங்கம்,
...ஸ்ரீனிவாசன், ச.தமிழ்ச்செல்வன்,
அ.வள்ளிநாயகம்

நிர்வாகம், சந்தா :
எம்.எஸ்.ஸ்டீபன்நாதன்
கே.எஸ்.தாராபாய்

அச்சாக்கம் மற்றும் விநியோகம் :
வி. பாஸ்கரன்

ஒளி அச்சுக்கோவை :
ஃபைன்லைன், சென்னை.

அச்சு :
...லித் வெப் ஆப்செட்,
சென்னை - 600 005.

உள்ளே...

ஆழி சூழ்ந்த உலகு: 2
ஓயாத அலைகளும் அவற்றின் நண்பர்களும் 5
கடல் அடுக்குமாடியில் வாழ்பவர்கள் 7
ஆபத்துகளை தடுக்கும் சின்னமலைகள் 10
சூரியனுக்கு சவால் விடுக்கும் நெய்தல் தாவரங்கள் 13
கடற்கரையில் ஒரு கடுமையான உழைப்பாளி 14
ஒரு அப்பம் வீணாகிவிட்டது 16
விலை நிர்ணயிக்க முடியாத சொத்து 18
இயற்கை சிற்பங்கள் 20
உலகின் முதல் கட்டிடக்கலைஞன் 22
பென்னியின் விலங்குகள் 26
குதிரை வாலும் கிழவன் கொலையும் 28
யுரேகா 30
கோள்களின் நிலைகள் 32



துளிர்
சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ்

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் - புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் பதிப்பு மலர் 24 - இதழ் 8 • ஜூன் 2010 • கடிதங்கள், படைப்புகள் அனுப்புவதற்கான முகவரி : துளிர் - ஆசிரியர் குழு, 245, அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், சென்னை - 600 086. தொலைபேசி - 044 - 28113630 • தொலைநகல் : 28113630 • மின் அஞ்சல் : tnsf2@dataone.in • சந்தா செலுத்துவோர் மற்றும் முகவர்கள் தொடர்பு முகவரி : துளிர் - நிர்வாக அலுவலகம், 245, அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், சென்னை -86. தனி இதழ் ரூ. 7.00 ஆண்டுச் சந்தா ரூ75, வெளிநாடு $ 20 ஆயுள் நன்கொடை ரூ700

Supported by the National Council for Science and Technology Communication, Department of Science and Technology-Government of India, Tamilnadu State Council for Science and Technology & Council for Scientific and Industrial Research. The views expressed in this magazine are not necessarily those of NCSTC/DST.

ஆழி சூழ்ந்த உலகு: ஜொலிக்கும் நீலக்கல்

சிறப்பிதழ் தொகுப்பு: ஆதி

ஆழி என்பது கடலைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். ஆழம், ஆழமான, ஆழ்ந்த (அமைதியான) ஆகிய சொற்களுக்கும் ஆழிக்கும் உள்ள தொடர்பை பொருத்திப் புரிந்துகொள்ளும்போது இது நன்றாகப் புரியும்.

பூமியின் முதல் உயிர் கடற்கரையில்தான் தோன்றியது. பூமியின் 97 சதவீதத் தண்ணீர் கடலில்தான் இருக்கிறது. பூமிபந்தின் 71 சதவீத பகுதியை கடல்கள்தான் சூழ்ந்திருக்கின்றன. என்றாலும், எல்லா



ஊர்களிலும் கடற்கரை கிடையாது. இந்தியாவில் கிட்டதட்ட 7,500 கிலோ மீட்டர் கடற்கரை உள்ளது. கொஞ்சம் மூச்சுவிட்டுக் கொள்ளுங்கள். மேற்கு வங்கத்தில் ஆரம்பித்து ரயில்பூச்சி போல ஊர்ந்து கொண்டே சென்றோம் என்றால் ஒரிசா, ஆந்திரம், தமிழகம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிராவைக் கடந்து குஜராத் வரை இந்தக் கடற்கரை கிழக்கில் இருந்து மேற்கு வரை நீண்டு கொண்டே செல்லும்.

இந்த கடற்கரைகளில் இருந்து உள்ளே நிலப்பகுதியின் முதல் 50 கி.மீ பரப்புக்குள் இந்தியா முழுவதும் 25 கோடி பேர் வாழ்கிறார்கள். அப்படியென்றால் இந்தியாவில் நான்கில் ஒருவர் இந்தப் பகுதியில் வாழ்கிறார்கள். இந்தப் பகுதிகள் ஆபத்தும் அதேநேரம் சுவாரசியமும் நிரம்பியவை. எப்படிச் சொல்கிறேன் தெரியுமா? வங்காள விரிகுடா கடலில் மட்டும் கடந்த 100 ஆண்டுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புயல்கள் உருவாகி இருக்கின்றன. இந்தப் புயல்கள் ஆபத்தானவை. பல புயல்களால் மக்களின் இறந்திருக்கிறார்கள், உயிரும் ஆபத்துக்கு உள்ளாகிறது. இவ்வளவு ஆபத்தைத் தாண்டி ஏன் அங்கு மக்கள் வாழ்கிறார்கள்? அங்குள்ள சுவாரசியமான விஷயங்களால்தான்.

கடலில்தான் பவளத்திட்டுகள் உள்ளன, கடல்புற்கள் வாழ்கின்றன, கரையில் அலையாத்திக் காடுகள் வளர்கின்றன, பாறைகள் கொண்ட கடற்கரைகள், மெல்லிய குருணைகுருணையாய் மணல் நிரம்பிய கடற்கரைகள், மணல்குன்றுகள் என பல்வேறு அம்சங்கள் உள்ளன. இந்த விஷயங்களும், இங்கு வாழும் உயிரினங்களும் இந்தப் பகுதிகளை ஆபத்துகளில் இருந்து காப்பாற்றுகின்றன. அல்லது அலை, புயல்காற்றின் வேகத்தை இவை கட்டுப்படுத்தி, ஆபத்துகளைக் குறைக்கின்றன. இந்த அம்சங்கள்

அனைத்தும் கொண்ட ஒரு பகுதி, ஒரு சூழல் அமைப்பு- கடல் மற்றும் கடற்கரை சூழல் அமைப்பு எனப்படுகிறது.

இந்த சூழல் அமைப்பின் முக்கியத்துத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு: ஒரு சொட்டு விட்டாலே உப்புக்கரிக்கும் கடல் தண்ணீருக்கு கொஞ்சம் தள்ளி நிலப்பகுதியில் கிணறு தோண்டினால் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. இது எப்படி சாத்தியம்? அந்தத் தண்ணீர் கரிப்பதில்லை, இனிக்கிறது. இதற்குக் காரணம் மணல்குன்றுகள் கடல் நீரை உள்ளே புகவிடவில்லை என்பதுதான். இந்த சூழல் அமைப்பு இப்படி பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

உலகில் வாழும் 25 நவீன விலங்குக் குழுக்களில் (Phyla) நான்கு குழுக்கள் மட்டுமே நிலப்பகுதியில் வாழ்கின்றன. அதேநேரம் பெருங்கடல்களில் 25 வகை விலங்குக் குழுக்களைச் சேர்ந்தவையும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. கடலில் வாழும் உயிரினங்களில் இல்லாத ஒரு வகை என்று தேடினோம் என்றால், நிலத்தில் பெருகி வாழும் பூச்சிகளை மட்டுமே கடலில் பார்க்க முடிவதில்லை. அவற்றுக்கு பதிலாக ஓடு உடைய இறால், நண்டு போன்றவை கடலில் பெருமளவு உள்ளன. இந்த உயிரினங்களும், தாவரங்களும், இதர கடல் அம்சங்களுக்கும் எவ்வளவு முக்கியமானவை என்பதை அடுத்து வரும் கட்டுரைகள் விளக்க முயற்சிக்கின்றன.

உதவிய நூல்கள்:
சாண்ட் இன் மை ஹாண்ட்ஸ், ஏ டிரீ, பெங்களூரு
டிரெஷர்ட் ஐலாண்ட்ஸ், கல்பவிருக்ஷ், புணே
ஆழிப் புதையல், சென்டர் ஃபார் என்விரான்மென்டல் எஜுகேஷன், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பக அறக்கட்டளை, ராமநாதபுரம்

கடற்கரையில் என்ன இருக்கிறது?

கடற்கரைக்குச் செல்லும் போதெல்லா ஒரு கேள்வி நம் மனதில் தோன்றிக் கொண்டே இருக்கும். எப்பொழுதும் கa மீது வந்து மோதிக் கொண்டே இருக்கு இந்த அலைகள் எங்கிருந்துதான் வருகின்றன, யார் இவற்றை உருவாக்குகிறார்கள்? என்பதுதான் அந் கேள்வி.

கடலின் மேற்பரப்பில் வீசும் காற்று கீழே இருக்கும் தண்ணீரோடு உராய்கிற இது தண்ணீரை இழுத்துக் கொண்டே செல்கிறது. காற்று வேகமாக வீசும்போது இந்த இழுவை செயல்பாடு அதிகரித்து அலைகள் உருவாகின்றன. சில குறிப்பி வகை காற்று ஒரு குறிப்பிட்ட கோணத் வந்து கரையில் மோதும் அலைகளை உருவாக்கும். இவைதான் அடியில் உள் நைசான, குருணைகுருணையான மண கடற்கரைக்கு கொண்டு வந்து சேர்க்கின்றன.

அலைகள் புதியவற்றை உருவாக்குகின்றன, சில நேரம் அழிக்கவ செய்கின்றன. ஒவ்வொரு அலையும் கடற்கரையில் உள்ள மணலை நகர்த்துகிறது. கடற்கரையின் அமைப்பையும் அதன் சரிவையும் மாற்றுகிறது. புயல், சூறாவளிகளின்போது அலைகள் கரையில் அதிவேகமாக வந் மோதுகின்றன, பெருமளவு மணலையும், கடற்கரையில் இருக்கும் இதர பொருள்களையும் அப்போது அவை புரட்டிப் போடுகின்றன. இந்த அலைகள் பெரும் கடலரிப்பையும் ஏற்படுத்துகின்ற

காற்று

ஐந்து இயற்கை சக்திகளில் ஒன்றான காற்று மிகவும் சக்தி வாய்ந்தது. இயற்கை உருவாக்கிய அதிசயங்களில் மர்மமானதும்கூட. காற்றுதான் அலைகள உருவாக்குகிறது, கடலோடிகள் கடலில் பயணம் மேற்கொள்ள உதவுகிறது. ஆடி மாதத்தில் நாம் பட்டம் விட்டு மகிழ உதவுகிறது. இப்பொழுது காற்றாலைகள் சுழற்ற இந்தக் காற்றை பயன்படுத்து

ம் நமக்கு மின்சாரமும் கிடைக்கிறது.

கடல் ஏற்றவற்றம் (High Tide, Low de)

கடல் போன்ற பெரும் நீர்ப்பரப்பு ப்பிட்ட காலத்துக்கு உயர்ந்தும், ப்பிட்ட காலத்துக்கு தாழ்ந்தும் க்கும். தொடர்ந்து கடற்கரைக்குச் ன்றால் இந்த மாற்றத்தை நம்மால் முடியும். கடல் உயர்ந்து இருப்பது மட்ட ஓதம் (High Tide) என்றும், ந்து இருப்பது தாழ்மட்ட ஓதம் (Low) என்று அழைக்கப்படுகிறது.

மிப்பந்தின் மீது சூரியனும் நிலவும் த்தும் ஈர்ப்புவிசையின் ணமாகத்தான் ஓதங்கள் ஏற்படுகின்றன. ப்பந்தின் மீது நிலவு செலுத்தும் புவிசையின் காரணமாக கடல்நீர் லே உப்புகிறது. இதன் காரணமாக வில் தண்ணீர்மட்டம் உயர்ந்து மட்ட ஓதம் (High Tide) உருவாகிறது. நாட்களுக்கு ஒரு முறையின் பூமிக்கும் க்கும் இடையிலான தூரம் சற்று படுவதால், தண்ணீரின் இயக்கம் மெதுவாகிறது. இதனால் கடல் சற்று கீழே சென்றுவிட்டது போலத் தோன்றும். இது தாழ்மட்ட ஓதம் (Low Tide). இந்த ஓதங்கள் எப்பொழுது உயரும், எப்பொழுது தாழ்ந்துபோகும் என்பதை பெருமளவு கணித்துவிடலாம். மீனவர்களுக்கு இவற்றைப் பற்றி நன்றாகத் தெரியும்.

ஏற்றவற்றத்துக்கு இடைப்பட்ட பகுதி (Intertidal Zone)

கடற்கரைக்குச் செல்லும்போது நீங்கள் ஒரு விஷயத்தை கவனித்திருக்கலாம். ஒரு சில மணி நேரங்களுக்கு முன்னால் கடல் அலைகள் மோதி ஈரமாகி இருந்த பகுதி, இப்போது சற்று காய்ந்து இருக்கலாம். அத்துடன் கடற்கரையை சற்று உற்றுநோக்கினால், ஒரு நீண்ட கோடு போல் மணல் இரண்டாகப் பிரிந்திருப்பதையும் பார்க்க முடியும். இந்தக் கோட்டின் மேற்புறம் மணல் காய்ந்தும், கோட்டின் கீழ்புறம் மணல் சற்று ஈரமாகவும் இருக்கும். இப்படி கரையைப் பிரிக்கும் இந்தக் கோட்டை நீர்தெறிப்புக்



கோடு (drift line) என்பார்கள்.

இந்தக் கோட்டுக்குக் கீழே உள்ள குறுகிய பகுதி உயர்மட்ட ஓதம், தாழ்மட்ட ஓதத்தின்போது முறையே ஈரமாகியும், காய்ந்தும் காணப்படும். இதை ஏற்றவற்றத்துக்கு இடைப்பட்ட பகுதி என்பார்கள். தாழ்மட்ட ஓதத்தின்போது இந்தப் பகுதிகள் மீது சூரிய ஒளி சுட்டெரிக்கும். மற்ற நேரத்தில் அலைகள் மோதுவதால் ஈரமாக இருக்கும். இப்படி இதன் நிலை மாறிக் கொண்டே இருக்கும். இப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலையில்கூட கடல் வெள்ளரி, நட்சத்திர மீன், கடல் முள்ளெலி, நத்தை, இறால், புரையுடலிக போன்ற பல உயிரினங்கள் இங்கு வாழ்கின்றன.

நீரோட்டம் (Ocean Currents)

கடலுக்கு உள்ளேயும் தண்ணீர் தொடர்ந்து நகர்ந்து கொண்டேதான் இருக்கிறது. கடற்கரைகளின் அருகே க மேற்புரத்தில் அலைகளாக இருப்பது மட்டுமின்றி, அதற்குக் கீழே உள்ள பகுதியிலும் தண்ணீர் நகர்ந்து கொண்டே இருக்கிறது. இதை கடல் நீரோட்டம் என்கிறார்கள். கடலின் மேற்புரத்தில் தொடர்ச்சியாக வீசிக் கொண்டிருக்கும் காற்று, வெப்பநிலையில் ஏற்படும் மாற்ற கடல்நீரின் உப்புத்தன்மை ஆகியவை காரணமாக இந்த நீரோட்டம் நிகழலாம். இதைத் தவிர ஒவ்வோர் ஆண்டும் வானத்தில் பருவமழைகளும் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு மழை மேகங்களை சுமந்து சென்று கொண்டிருக்கின்றன.



கடல் அடுக்குமாடியில் வாழ்பவர்கள்

ஓங்கில் (டால்பின்)
வெளவால் மீன் (பிளையிங் பிஷ்)
இழுதுமீன் (ஜெல்லி மீன்)
திருக்கை (மன்டா ரே)
…புனா
கடல் பாம்பு (பேன்டட் சீ சினேக்)
…ச்சை வேளா மீன் (சா பிஷ்)
சுத்தியல் சுறா (ஹாம்மர் ஹெட் ஷார்க்)
ஹாட்செட் பிஷ்
…ன்டர்ன் பிஷ்
ஆங்லர் பிஷ்
போலிக் கணவாய் (வாம்பையர் …விட்)

…ர் சி.வி. ராமன் சொன்னது போல …லின் மேற்பரப்பில் நோக்கும் …சயெல்லாம், பேனா மையை …த்தது போல ஒரே மாதிரி …றமாக இருப்பது போலத் தோன்றலாம். ஆனால் அது முழுமையான உண்மையல்ல. கடலின் ஆழத்துக்கு ஏற்ப உயிரினங்கள், தாவரங்கள் வியக்க வைக்கும் அளவுக்கு வேறுபடும். கடலின் மேற்பரப்பில் இருந்து சில அடி தூரத்துக்கு கீழே உள்ள பகுதி சூரியஒளி ஊடுருவும் பகுதி எனப்படுகிறது. இந்தப் பகுதிக்கு மட்டும்தான் பகல், இரவு எல்லாம் உண்டு. அதற்குக் கீழே உள்ள பகுதி குளிருடன் மங்கலாக, பெரிய மாற்றங்கள் இல்லாமல் இருக்கும். ஆயிரக்கணக்கான அடிகள் கீழே சென்றால், பெருங்கடல்களின் அடியாழத்தில் உறைந்து போக வைக்கும் குளிர், கடுமையான அழுத்தம், கும்மிருட்டு சூழ்ந்திருக்கும்.

பெரும்பாலான உயிரினங்கள் சூரியஒளி ஊடுருவும் பகுதி, மங்கலான பகுதி, கும்மிருட்டுப் பகுதி ஆகிய மூன்று பகுதிகளில் வாழ்வதற்கு ஏற்ப தங்களைத் தகவமைத்துக் கொண்டுள்ளன.

சூரியஒளி ஊடுருவும் பகுதி

வெளவால் மீன் (Flying Fish)

இந்த மீன் உண்மையில்

பறப்பதில்லை. ஆனால் நீந்தும் வேகத்தில் தண்ணீரில் இருந்து எம்பிக் குதித்தும் சறுக்கியும் செல்கிறது. இதன் உடல் வெள்ளி நிறத்தில் 20 செ.மீ நீளத்துடன் இருக்கும்.

இழுது மீன் (Jelly Fish)

பவளத்திட்டுகளுக்கு அருகே வாழும், கண்ணாடி போன்று ஒளி ஊடுருவும் உடலைக் கொண்டது. இதன் உணர்கொம்புகள் விலங்கு தோலை தொந்தரவு செய்யக்கூடியது. தனது உணர்கொம்பு மூலமாக சிறிய மீன்களை செயலிழக்கச் செய்து சாப்பிடும். சில வகை கடல் ஆமைகள் இழுது மீன்களை உண்கின்றன.

ஓங்கில் (Dolphin)

புத்திசாலியான நட்புத்தன்மை கொண்ட பாலூட்டி. சிறிய மீன்கள், கணவாய் மீன்களை உண்ணும். மீயொலி அலைகள் மூலமாகவும், சிக்கல் மிகுந்த தனக்கே உரிய மொழி மூலமாகவும் தன் இனத்துடன் உரையாடும்.

கடல் பாம்பு (Banded Sea Snake)

விஷமுள்ள, அதேநேரம் மனிதர்களுக்கு ஆபத்து தராத பாம்பு. தாக்கப்பட்டால் மட்டுமே கொத்தும். இனச்சேர்க்கை செய்வதற்காகவும், முட்டையிடவும் நூற்றுக்கணக்கில் கடற்கரைக்கு வரும். தட்டையான வாலைப் பயன்படுத்தி வேட்டையாடும் தன்மை கொண்டது.

டியூனா (Tuna)

ஓங்கில்களுக்குக் கீழே கூட்டமாக நீந்தக் கூடிய, வேட்டையாடும் மீன். வர்த்தக ரீதியில் முக்கியமானது.

சம்மட்டி சுறா (Hammer Head Shark)

எல்லா சுறாக்களைப் போலவே இதற்கும் எலும்புகள் கிடையாது. ஆனால் வலுவான உடல்திசுவைக் கொண்டது. இதன் தலை சுத்தியலைப் போன்றிருக்கும், அதன் இரு முனைகளில் கண்களைக் கொண்டது. வேட்டையாடும்.

திருக்கை (Manta Ray)

இது மிகப் பெரிய திருக்கை மீன். நேராகவும் பக்கவாட்டிலும் 6 அடி நீள கொண்டது. கடல்மேற்பரப்பில் வாழும் இது, பிளாங்கடன் எனும் மிதவை நுண்தாவரத்தை உண்ணும். தண்ணீரில் சறுக்கிச் செல்லும்.

வேளா மீன் (Saw Fish)

ரம்பத்தைப் போன்ற நீண்ட வாயை கொண்டது. மீன் கூட்டத்துக்கு இடையே புகுந்து பக்கவாட்டில் தன் ரம்பத்தை ஆட்டும். இதனால் காயமடையும் மீன்கள் இதனிடம் சிக்கி உணவாகும்.

மங்கலான பகுதி

லாண்டர்ன் மீன் (Lantern Fish)

இரவில் கடல் மேற்பரப்புக்கு வரும் இந்த மீன், சூபிளாங்டன் எனும் மிதவை நுண்ணுயிரை உண்ணும். பழுப்பு அல்லது சாம்பல் நிறத்திலிருக்கும் இந்த மீனின் உடலில் இருக்கும் பிரகாசமான புள்ளிகள், இந்த மீனுக்கு வெளிச்சத்தை தருகின்றன.

ஹாட்செட் மீன் (Hatchet Fish)

சூபிளாங்டன், இறால்களை உண்ணும். பக்கவாட்டுப் பகுதிகள் வெள்ளி நிறமாகவும், அடிப்பகுதி பிரகாசமாகவும் இருக்கும்.

கும்மிருட்டு பகுதி

ஆங்க்லர் மீன் (Angler Fish)

பெண் மீன்களின் தலையில் உள்ள நீண்ட கம்பி போன்ற பகுதியின் நுனியில் விளக்கு இருக்கும். இதன் மூலம் இரையையும் ஆண் மீனையும் கவர்ந்து இழுக்கும், கண்டறியும். மீன், சூபிளாங்டன், கணவாய், புழுக்களை உண்ணும்.

வேம்பயர் கணவாய் (Vampire Squid)

இது உண்மையான கணவாயோ, ஆக்டோபஸோ கிடையாது. இதன் கறுப்பு உடலில் நாவல் பழ நிறத்தில் திட்டுகள் இருக்கும். அதில் சிறிய விளக்குகளும் உண்டு.

WHO'S WHO IN THE OCEAN

ஆபத்துகளை தடுக்கும் சின்னமலைகள்

நமது கடற்கரைகளை புயல், சூறாவளிகள், பேரலைகள் போன்றவை அவ்வப்பொழுது தாக்கிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அந்த அலைகளும் புயல்களும் நம்மை தாக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று உங்களுக்குத் தெரியுமா?

நீண்ட மணல் நிறைந்த கடற்கரைகளும் பெரும் மணல்குன்றுகளும்தான் புயல், பேரலைகளில் இருந்து நம்மை காப்பாற்றுகின்றன. இவை கடற்கரைகளில் நமக்காக நின்று கொண்டிருக்கும் பாதுகாவலர்கள். வேகமாக வந்து மோதும் அலைகளையும், மூர்க்கமாக வரும் புயல்களையும் தடுத்து, தங்கள் மீது தாங்கிக் கொண்டு நமது வீடுகளையும்

களையும் காப்பாற்றுகின்றன.
ம் குளங்கள், கிணறுகளில் கடலின்
த்தண்ணீர் புகுந்துவிடாமலும் இவை
கின்றன. உப்புத்தன்மை கொண்ட
காற்றின் வீரியத்தையும் இவை
மளவு குறைக்கின்றன. இந்தக்
கட்டடங்களை அரிக்கக் கூடியது,
ங்களை சிதைக்கக் கூடியது.
லும் இந்த மணல்மேடுகளில்தான்
ர்களின் படகுகள், அவர்களது
, பொருட்கள் இருக்கின்றன. மீன்
பாரமும் நடக்கிறது. மீனவர்கள்
விட்டால் நமக்கு மீனும் கருவாடும்
க்காது. ஊட்டச்சத்துமிக்க உணவும்
க்காது.

எப்படி உருவாகிறது?

கடற்கரைகளுக்கு அருகே இருக்கும் பெரும் மணல்மேடுகள் அல்லது குன்றுகள் மணல்குன்றுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை நிலப்பகுதிக்குள் வந்திருக்கும் கடற்கரையின் நீட்சிதான். அலைகள், ஏற்றவற்றம் மூலமாக கடற்கரைகளை கடல் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது. நிலத்துடன் அதிகம் தொடர்புகொண்டுள்ள இந்த மணல்குன்றுகளை காற்று கட்டுப்படுத்துகிறது.

பெருமளவு மணலும், மணல்துகள்களை நகர்த்தும் அளவு வேகம் கொண்ட காற்றும், அலை குவியலாக குவிவதற்கு ஏற்ற ஓர் இடம்

ஆகிய மூன்றும் இருந்தால் இயற்கையாகவே மணல்குன்றுகள் உருவாகிவிடும். கடற்கரைகளில் இருந்து நிலப்பகுதியை நோக்கி வீசும் காற்று நுண்ணிய மணலை அடித்து வந்து சேர்க்கிறது. காற்று கொண்டு வரும் இந்த மணல் தாவரங்கள், இதர தடைகளில் சிக்கிக் கொள்ளும்போது மணல்குன்று உருவாக ஆரம்பிக்கிறது. முதலில் சிறிய மணல்மேடாக உருவாகும் இவை, காலப்போக்கில் காற்று மணலை கூடுதலாகச் சேர்க்கச்சேர்க்க பெரிய மணல்குன்றாக உருவெடுக்கின்றன.

மணல்குன்றை உருவாக்கும் காற்றே அதை அழிக்கவும் கூடும். சூறாவளி, புயல்களின்போது வீசும் காற்றும் பேரலைகளும் கடற்கரைகளையும், மணல்குன்றுகளின் முன்பாகத்தையும் அழிக்கக்கூடும். அதேநேரம் காற்றின் வேகம் வழக்கமான அளவுக்கு திரும்பிய பிறகு, மீண்டும் மணல்குன்று கொஞ்சம்கொஞ்சமாக உருவாகத் தொடங்கிவிடும், பழையபடியே.

ஆபத்துகள்

மணல் கொள்ளை, கனிமம் தோண்டியெடுப்பு, கடல் தடுப்புச்சுவர், காங்கிரீட் கட்டடங்கள், கடற்கரையோ நெடுஞ்சாலைகள், சுற்றுலா, சுற்றுச்சூ மாசுபாடு, கடல்அரிப்பு போன்ற பல்வேறு காரணங்களால் மணல்குன்று அழிந்து வருகின்றன.

கோட்டைச்சேரிமேடு, கோட்டைமே சின்னக்கோட்டைமேடு, கிளிஞ்சல் மே என்பது போன்று மணல்குன்றுகளின் அமைந்த பல மீனவ கிராமங்கள் தமிழகத்தில் உண்டு. 2004ஆம் ஆண் டிசம்பர் 26ந் தேதி சுனாமி என்ற ஆழிப்பேரலை நம் கடற்கரைகளைத் தாக்கியபோது, மணல்குன்றுகள் இரு கிராமங்கள் தப்பித்தன அல்லது உயிர்சேதமும் சொத்து இழப்பும் அ குறைவாக இருந்தது. இதற்குக் காரண அந்த கிராமங்கள் மணல்குன்றுகளுக் பின்னாலோ, அல்லது மணல்குன்றின் மேலேயோ இருந்ததுதான். ஆழிப்பேரலைக்குப் பின்னர்தான் மணல்குன்றுகளின் முக்கியத்துவத்தை நமது மக்கள் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பொழுது அவற்றை பாதுகாக்கவும் பழையபடி வலுவாக மாற்றவும் அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

சூரியனுக்கு வால் விடுக்கும் நெய்தல் தாவரங்கள்

டலும் கடல் சார்ந்த பகுதியை
தல் என்கிறோம். இந்த நெய்தல்
தில் பல வித்தியாசமான தாவரங்கள்
கின்றன. மணல்குன்றுகளில் இருக்கும்
ங்கள் இவற்றில் மிக
பமானவை. ஒரு மணல்குன்றின்
க்கத்திலும் வடிவத்திலும் அவை
ய பங்காற்றுகின்றன.
வனத்தைப் போலவே
குன்றுகளின் சூழ்நிலையும்
தால் இங்கு தாவரங்கள்,
னங்கள் உயிர் வாழ்வது கடினம்.
ன்றால்,

அதிக அளவு மணல் நகரும்
டலில் இருந்து உப்புக்காற்று வீசும்
மிக அதிக வெப்பநிலை நிலவும்
அதிவேகமாக காற்று வீசும்
மிகக் குறைந்த அளவே நன்னீர்
டைக்கும்

னால், மணல்குன்றுகளின் மூன்று
டங்களில் வாழும் தாவரங்கள்
றை மாறுபட்ட வகையில்
கொண்டு வாழ்ந்து காட்டுகின்றன.

னோடிகள்

லுக்கு அருகே இருக்கும் தாவர
ளில் ஒன்றான படரும் புற்கள்
தடிமனான இலை, தண்டுகளுடன்
இருக்கும். மணல் குவிவதை எதிர்கொள்ள
அதிவேக வளர்ச்சி, சதைப்பற்றுள்ள
உடலில் அதிகமாக நீரைச் சேர்த்துக்
கொள்வது, அதற்காக மணலுக்குள்
ஆழமாக ஊடுருவிச் செல்லும் வேர்
போன்றவற்றைக் கொண்டிருக்கும். படரும்
தன்மை காரணமாக நகர்ந்து
கொண்டிருக்கும் மணலின் மேற்பரப்பிலும்
இவை படரும். இவற்றில் பிரபலமானவை
ஆட்டுக்கால் (*Ipomoea pes-caprae*),
ராவண மீசை (*Spinifex*).

புதர்கள்

இந்தப் புதர்கள் வளரும் பகுதிகளில்
மிதமான அளவே மணல் நகரும்.
உப்புக்காற்று குறைவாக வீசும் என்றாலும்,
வெப்பநிலை மிக அதிகமாகவே இருக்கும்.

இந்தப் பகுதியில் கருவை (*Prosopis*), கள்ளி (Cacti) ஆகியவை அதிகமாக வளரும்.

மரங்கள்

மிகப் பெரிய மணல் குன்றுகளின் நிழலில், நல்ல மழை கிடைக்கும் பகுதிகளில் மரங்கள் வளரும். இந்தப் பகுதியில் காடு உருவாக நீண்ட காலமாகும். மேலும் மண்ணின் தன்மை, ஈரப்பதம், ஊட்டச்சத்துமிக்க விளைநிலம், பாதுகாப்பு ஆகியவற்றைப் பொருத்தே மரங்கள் வளரும். முந்திரி, புளியமரம், பனை மரம், பான்டனூஸ் ஆகியவை மணல்குன்றுகளின் மீது வளர அதிக வாய்ப்புள்ள மரங்கள்.

அச்சுறுத்தும் அயல் தாவரங்கள்

வேகமாக வளர்கிறது என்பதற்காக, கடற்கரைகளில் வனத்துறை, வேறு சிலரால் நடப்பட்ட, தானாகவே வளர்ந்த சவுக்கு, வேலிக் கருவை (கருவை மரம் அல்ல) ஆகிய இரண்டும் வெளிநாடுகளில் இருந்து வந்தவை. அவை நமது மண்ணுக்கேற்ற மரங்கள் இல்லை. இவை, நம் பகுதியில் இயல்பாக வளரும் தாவரங்களின் இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. இவற்றால் சுற்றுச்சூழலில் நிறைய பிரச்னைகள் ஏற்படுகின்றன. தண்ணீரை மிகஅதிகமாக உறிஞ்சும் தன்மை கொண்டவை இந்தத் தாவரங்கள்.

கடற்கரையில் ஒரு கடுமையான உழைப்பாளி

படவிளக்கம்: வரிசைப்படி கன்னா (Rhizophora), அலையாத்தி (Avicennia), புருகெய்ரா, நிபா பாம், அலையாத்தி பெரணி (Acrostichium)

வாழ்க்கை முழுக்க உப்புத்தண்ணீரை குடித்து உயிர் வாழ முடியுமா? சில தாவரங்கள் இப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றன. தமிழில் அலையாத்தி அல்லது கண்டல் காடுகள் என்றழைக்கப்படும் மாங்குரோவ் காடுகள் உப்புத்தன்மை மிகுந்த கடல்நீரிலும் வளரும் அதிசய தன்மை கொண்டவை. நிலமும், கடலும் சேரும் இடங்களில் களிமண் நிறைந்த சகதியான மண்ணில் இந்த அலையாத்திக் காடுகள் வளர்கின்றன.

இவ்வளவு உப்பை அந்த தாவரங்கள் எப்படி சகித்துக் கொண்டு வாழ்கின்றன என்ற கேள்வி வரலாம். இந்த மரங்களின் வேர்கள் நீரிலுள்ள உப்பை வடிகட்டும் தன்மை கொண்டவை. இதைத் தாண்டி தாவரத்தில் புகும் உப்பை, இலையிலுள்ள உப்புச்சுரப்பிகள் வெளியேற்றும். மேலும் சிறிதளவு உப்பை கிரகித்துக் கொண்டு இலைகள் தடிமனாகும்.

இதன் அடிமரம், மரத்[தின்] பக்கவாட்டில் இருந்து முளைத்த முட்டு வேர்கள் (Stilt roots) மரம் கீழே விழாமல் உறுதியாக பிடித்துக் கொள்கின்றன. அத்துடன் மரத்தின் அடி[யில்] இருந்து உருவாகி மண்ணுக்குள் சென்று, அங்கிருந்து வெளியே கிளைத்து தண்ணீருக்கு [மேல்] நீட்டிக் கொண்டிருக்கும் சிறப்பு வேர்களில் உள்ள நுணுக்கமான துளைகள் ஆக்சிஜனை சுவாசிக்கவு[ம்] செய்கின்றன.

சில முக்கியமான அலையாத்தி தாவரங்கள் கன்னா (Rhizophora), அலையாத்தி (Avicennia[)], புருகெய்ரா, நிபா பாம்,



...யாத்தி பெரணி
...stichium). இவற்றைத்
... தமிழக அலையாத்தி
...களில் நரிக்கன்னா
...iops), தில்லை
...coecaria) போன்ற
...ரங்களும்
...முள்ளன. கடல்
...வற்றத்துக்கு
...டப்பட்ட பகுதியில்
... இந்தக் காடுகளைச்
...து எண்ணற்ற
...ரங்களும்
...ரினங்களும்
...கின்றன. பூமியின் மிக
...மான மீன்களுக்கான
...டம் என்று அலையாத்தி
...கள் கருதப்படுகின்றன.

அலையாத்திக் காடுகள்
...யின்றி, மந்திரஜாலம்
...ல நமது கடற்கரைகளை
...ங்காலமாக காப்பாற்றி
...கின்றன. அவை செய்யும்
...ருதவிகள்:

வெள்ளத் தடுப்பு:
...லையாத்திக் காடுகள்
...மற்ற மிகப் பெரிய
...ணங்களைப்
...லிருக்கின்றன. இதனுள்
...ம் தண்ணீர் தனது இயக்க
...ற்றலை இழந்து பரவ
...ரம்பிக்கிறது.
...காடுகளில் உள்ள
...ர்த்தியான தாவரங்களும்
...ணீரின் வேகத்தைக்
...டுப்படுத்துகின்றன.

வண்டல் காவலர்கள்:
...லைச்சரிவில் இருந்து வரும்
...ழைநீர் மிக நுணுக்கமான
...ளம் நிறைந்த வண்டல்
...ண்ணையும் ஊட்டச்சத்து
...ருந்த இலைகளையும்
...டித்து வரும்.
அலையாத்திக் காடுகள்
அந்த வண்டலையும்
இலைகளையும் பிடித்து
வைத்துக் கொள்கின்றன.
அலையாத்தி காடுகளில்
உள்ள தாவரங்கள்,
உயிரினங்கள் அந்த
சத்துகளை உணவாக்கிக்
கொள்கின்றன.

புயல் தடுப்புகள்:
பருவமழைக் காலங்களிலும், புயல் காலங்களிலும் பெரும் புயல்களும் பேரலைகளும் நம் கடற்கரை களைத் தாக்குகின்றன. இந்த அதிவேகமான இயற்கை வீரர்களை, அலையாத்தி காடுகள் அமைதியாக எதிர்கொண்டு தடுக்கின்றன. கடற்கரையில் பெரும் தடுப்பு அரண் போலிருக்கும் இவை, புயலின் வேகத்தை குறைக்கின்றன. நமது வீடுகள், நிலப்பகுதியின் அழிவைத் தடுக்கின்றன.

இயற்கை இனப்பெருக்க மையம்: மீன்கள், இறால்கள், நண்டுகள் இனப்பெருக்கம் செய்ய ஏற்ற இடமாக அலையாத்தி காடுகளைக் கருதுகின்றன. இந்தப் பகுதியில் அவற்றின் குஞ்சுகள் பிழைக்க வாய்ப்பு அதிகம். இங்கு கிடைக்கும் ஊட்டசத்துமிக்க உணவு அவற்றின் உடல் வளர்ச்சிக்கு மிக முக்கிய மானது. நமக்கு உணவாகும் பல மீன்கள் அலையாத்தி காடுகளை நம்பியே உள்ளன.

நடக்கும் காடுகள்:
அலையாத்தி காடுகள் கொஞ்சம் கொஞ்சமாக கடலை நோக்கி நகர்ந்து கொண்டே இருப்பதால் நமக்கு அதிக நிலப்பகுதி கிடைக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் சிறிதளவு கடல் பகுதியை ஒவ்வொரு அலையாத்தி காடும் ஆக்கிரமிக்கிறது. அதேநேரம் உள்ளே நிலப்பகுதி உருவாகிறது.

ஆபத்துகள்
ஆனால் அலையாத்திக் காடுகளின் இந்த முக்கியத்துவங்களைப் புரிந்து கொள்ளாமல் மனிதர்கள் அவற்றை அழித்து வருகிறார்கள். தொழிற்சாலை கழிவு நீர் அலையாத்தி தாவரங்களை அழிக்கிறது. உப்பளங்களில் இருந்து வெளியேறும் அளவுக்கு அதிகமான உப்பு நீர் தாவர வளர்ச்சியை பாதிக்கிறது. இறால் பண்ணைகள் அமைக்க அலையாத்திக் காடு அழிக்கப்படுகிறது. நதிகளின் தண்ணீர் வரத்து குறைவதாலும் இயற்கையாகவே அழியும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.



அராபிய நாடோடிக்கதை

ஒரு அப்பம் வீணாகிவிட்டது

யூமா. வாசுகி

ஒரு காலத்தில் அரேபியாவில் அல்ஷா என்றொரு சிறுவன் இருந்தான். அவன் தன் அம்மாவுடன் வாழ்ந்து வந்தான். இந்த அல்ஷா இருக்கிறானே, அவன் மிகவும் நல்ல பையன். ஒரு நாள் அவன் அம்மாவிடம் சென்றான்.

"அம்மா... அம்மா... நான் சென்று என் குருவைப் பார்த்துவிட்டு வரட்டுமா? அவரைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆர்வமாக இருக்கிறது!"

அம்மா மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் சீக்கிரமாக அப்பம் சுடத் தொடங்கினார்கள். அம்மா நிறைய அப்பம் சுடுவதை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அல்ஷா கேட்டான்:

"எதற்காக அம்மா இவ்வளவு அப்பம் சுடுகிறீர்கள்?"

"நீ உன் குருவைப் பார்ப்பதற்காக நீண்ட நெடுந்தொலைவு பயணம் செய்ய வேண்டியிருக்கிறதல்லவா? வழியில் உனக்குப் பசிக்கும்போது தின்பதற்குத்தான் இத்தனை அப்பம்!"

அம்மா நூறு அப்பம் செய்தார்கள். பிறகு அவற்றை ஒரு பையில்போட்டு, அல்ஷாவின் கையில் கொடுத்தார்கள். பையுடன் அவன் பயணம் புறப்பட்டான்.

மேலே சுட்டுப் பொசுக்கும் சூரியன்! கீழே கொதிக்கும் பாலைவன மணல்! பாவம் அல்ஷா... அவன் மிகவும் களைப்படைந்தான். வழியில் ஒரு ஈச்சை மரம் இருந்தது. சற்று ஓய்வெடுப்பதற்காக அந்த மரத்தடியில் அமர்ந்தான். பசிக்க ஆரம்பித்துவிட்டது.

பையிலிருந்து ஒரு அப்பத்தை



த் தின்ன முற்பட்டான்.
ாது ஒரு அழைப்புக் குரல்
து.
கனே... மகனே... சாப்பிட்டு
 நாட்களாகின்றன. பசி
கிறது. எனக்கு ஏதாவது கொடு
”
ல்ஷா பார்க்கும்போது அங்கே
மான ஒரு முதியவர்
கோலுடன் நின்று யாசித்துக்
டிருந்தார். அல்ஷா மனம்
ினான். அவன் அந்த அப்பத்தை
ரிடம் கொடுத்தான். முதியவர்
சியுடன் செல்வதைப்
யடியே இன்னொரு அப்பத்தை
ான். அப்போதுதான் பசியால்
்று எலும்பும் தோலுமான ஒரு
ங்கே வந்தது. அவன் அந்த
ும் ஒரு அப்பம் கொடுத்தான்.
ல்ஷா மீண்டும் நடக்கத்
ங்கினான். களைப்படைந்தபோது
த்தில் அமர்ந்தான். பிறகு
ிருந்து ஒரு அப்பத்தை வெளியே
ான்.
கனே... பசி தாங்க முடியவில்லை
 அந்த அப்பத்தை எனக்குத்
யா?” ஒரு பாட்டிதான் இப்படிக்
ாள். அல்ஷா ஒரு அப்பத்தை
 பாட்டிக்குக் கொடுத்தான்.
ப்படி அல்ஷா எப்போதெல்லாம்
ிருந்து அப்பத்தை எடுக்கிறானோ
ாதெல்லாம் யாராவது
ிடுவார்கள்! பசியால் சிரமப்பட்ட
களுக்கும்
்களுக்குமெல்லாம் அவன் தன்
்தைக் கொடுத்தான். தன் பசியை
 உணரவேயில்லை!
சித்திருப்பவர்களுக்கு உணவு
ப்பதுதான் மிகப் பெரிய நற்செயல்
 என் குரு எனக்குச் சொல்லிக்
த்திருக்கிறார். கடவுளுடைய
ாதமும், நான் உதவி
வர்களின் ஆசீர்வாதமும் எனக்குக்
க்கும்! என்று நினைத்தான் அந்த
சிறுவன்.
டைசியில் ஒரு அப்பம் மட்டும்
ிருந்தது. அல்ஷா அதை எடுத்தான்.
து வருகிறார்களா என்று சற்று

நேரம் காத்திருந்தான். யாரும் வரவில்லை. எனவே அவன் அதைச் சாப்பிட்டான்.

பிறகு தன் குருவைச் சந்தித்த பிறகு அல்ஷா திருப்பி வீட்டிற்குச் சென்றான். மகனைப் பார்த்த அம்மா ஓடி வந்தார்கள். “ஓ! நீ சென்று மூன்று நாட்களாகின்றனவே! பயணம் நல்லபடியாக இருந்ததா?” அவனை அன்புடன் கட்டித் தழுவிக்கொண்டு அம்மா கேட்டார்கள்: “நான் கொடுத்தனுப்பிய அப்பம் முழுதும் பயணத்தில் பயன்பட்டதா மகனே?”

அல்ஷா சொன்னான்: “ஆமாம் அம்மா! தொண்ணூற்று ஒன்பது அப்பம் பயன்பட்டது. ஒரே ஒரு அப்பம் மட்டும் வீணாகிவிட்டது!”

“அப்படியா? அந்த ஒரு அப்பத்தை நீ என்ன செய்தாய் மகனே?” அம்மா வியப்புடன் கேட்டார்கள்.

“அதை நான் தின்றேன். மிச்சமுள்ளதையெல்லாம் பசியால் வாடியவர்களுக்குக் கொடுத்தேன்!” என்று அல்ஷா நடந்ததையெல்லாம் சொன்னான். அதைக் கேட்டு அம்மா மிகவும் பெருமிதமடைந்தார்கள்.

நற்குணமும் கருணையும் மிகுந்த தம் மகனை அம்மா முத்தமிட்டு வாழ்த்தினார்கள். அந்த சிறுவன் பிற்காலத்தில் மிகப் பெரிய கவிஞனானான்.



விலை நிர்ணயிக்க முடியாத சொத்து

மூளை பவளம்
மான்கொம்பு பவளம்
தட்டு பவளம்
காளான் பவளம்
விரல் பவளம்

ஆழமற்ற கடல்பகுதிகளில் காணப்படும் பவளம் (Corals), எலும்புக்கூடு போன்ற சுண்ணாம்புக் கூட்டின் மீது கூட்டங்கூட்டமாக வாழும் உயிரினங்கள். இவை கடல் அனிமோன், இழுதுமீன் ஆகிய உயிரினங்களின் குடும்பத்தைச் சேர்ந்தவை. ஒவ்வொரு பவளப்பூச்சியும் பாலிப் (Polyp) என்று அழைக்கப்படும். சுண்ணாம்புக் கூட்டின் மீது இவை வாழும் இதற்கு வாயும், உணர்கொம்புகளும் உண்டு. பிளாங்க்டன் போன்ற மிதவை நுண்தாவர உணவை பிடிக்க இந்த உணர்கொம்புகள் பயன்படும். ஆபத்து ஏற்படும்போது உள்ளே இழுத்துக் கொள்ளும் தன்மை கொண்டவை இந்த உணர்கொம்புகள். பவளப்பூச்சிகள் சுண்ணாம்புக் கூட்டின் மீது ஒட்டிக்கொண்டே காலம் முழுவதும் வாழ்ந்தாக வேண்டும். அவற்றால் நகர முடியாது.

18

பவளத்திட்டுகளில் (Coral Reef) பல வடிவங்கள், வகைகள் உண்டு. மூளை பவளம், மான்கொம்பு பவளம், தட்டு பவளம் ஆகியவற்றைப் பற்றி விளக்கங்களைக் காண்போம்.

மூளை பவளம்: மனித மூளையை ஒத்திருப்பதால் இவை இந்தப் பெயர்பெற்றன. பவளப்பூச்சிகள் கூட்டின் முகடுகளில் வளர்வதால் இந்தத் தோற்றம் உருவாகிறது. மூளை வடிவப் பவளங்கள் மனிதர்களின் தலை அளவுக்கு வளர்வதற்கு 20 ஆண்டுகள் ஆகும்.

மான்கொம்பு பவளம்: மான் கொம்பின் கிளையை ஒத்த வடிவம் கொண்டுள்ள இவை இந்தப் பெயர்பெற்றன. இந்தப் பவளங்களில் கிளைகள் ஒடிந்து விழுந்தாலும்கூட, அதிலிருந்து புதிய கிளை துளிர்த்து வளரும் தன்மை கொண்டது.

தட்டு பவளம்: இந்த வகை பவளத்திட்டுகள் பல அடுக்குகளைக் கொண்ட தட்டு போலிருக்கும். தெளிந்த நீரில் மட்டுமே இந்த வகை பவளத்திட்டுகள் காணப்படும்.

காளான் பவளமும், விரல் பவளமும் காளான்களைப் போலவும், மனித விரல்களையும் ஒத்திருக்கும்.

இந்த பவளத்திட்டுகள் விலைமதிக்க முடியாத பல சேவைகளை புரிந்து வருகின்றன. அவை:

கடலோர பாதுகாவலர்கள்: தடுப்பு போல் செயல்பட்டு அலையின் வேகத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் பவளத்திட்டுகள் நமது கடற்கரைகளை பாதுகாக்கின்றன. ஆழம் குறைவான பகுதிக்கு அலைகள் வரும்போது, பவளத்திட்டுகளின் மீது பட்டு, அவை உடைந்து சிதறுகின்றன. இதன்மூலம் தங்கள் சக்தியை பெருமளவு இழக்கின்றன. பவளத்திட்டுகள் இல்லையென்றால், நம் கடற்கரையில் பெரும்பகுதி அரிக்கப்பட்டு கடலுக்குள் மூழ்கிவிடும். நமது தீவுகள் குறுகிக்குறுகி சிறியதாகிவிடும். பவளத்திட்டுகள்தான் இவை அனைத்தையும் பாதுகாக்கின்றன.

உணவுக்கிடங்குகள்: பல கடல் உயிரினங்கள், மீன்களுக்கு தங்குமிடம், உணவு தேடுமிடம், இனப்பெருக்கம் செய்யுமிடம், குஞ்சுகளை வளர்க்குமிடம் பவளத்திட்டுகள் இருக்கின்றன. வணிக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல மீன்கள் இங்குதான் உற்பத்தி ஆகின்றன.

அற்புத சிற்பங்கள்: கடலுக்கு உள் இருந்தாலும்கூட பவளத்திட்டுகளின் பளிச்சிடும் நிறங்களும் வடிவங்களும், உயிர்ச்செழிப்பும் மிகப் பெரிய ஆச்சரியங்கள். பவளத்திட்டுகளின் உள் கோமாளி மீன்கள் உள்ளே நுழைந்து

ியே வரும் காட்சி மிக
புதமானது.

ஆபத்துகள்

பவளத்திட்டுகள் சுண்ணாம்புக்காக
ட்டியெடுக்கப்படுகின்றன. வெடிவைத்து
பிடிப்பதால் தகர்ந்து போகின்றன.
ழிற்சாலை, வீட்டுக் கழிவால்
ரிழக்கின்றன. அதிக வெப்பநீர்
ியேற்றப்படுவதாலும்
ரிழக்கின்றன. இதற்கெல்லாம் மேலாக
ங்காரப் பொருட்கள் செய்வதற்காக
ருமளவு உயிருடன்
ரிக்கப்படுகின்றன.













இயற்கை சிற்பங்கள்

சங்குகள், முத்துச்சிப்பிகள் மெல்லுடலிகள் வகையைச் சேர்ந்தவை. மென்மையான உடலைக் கொண்டிருப்பதால், அவற்றை பாதுகாக்கும் பாதுகாப்புக் கவசமாக ஓட்டைப் பெற்றுள்ளன. பிறந்தது முதல் இந்த ஓட்டை சிறிது சிறிதாக உருவாக்குகின்றன.

சங்குகள் கடலடி மட்டத்தில் மணற்பாங்கான பகுதிகளில் கூட்டமாக வசிக்கும். இவை அதிகமாக காணப்படும் பகுதிகள் சங்குப் படுகைகள் என்றழைக்கப்படுகின்றன. மணலில் புதைந்திருக்கும் புழுக்களை இவை உண்கின்றன. ஆண் சங்குகளைவிட பெண் சங்குகள் அளவில் பெரியவை. இனச்சேர்க்கைக்குப் பிறகு பெண் சங்கு வெளியிடும் முட்டைக்கூடு சங்குப்பூ என்றழைக்கப்படுகிறது. இந்தக் கூட்டில், குறுக்குவாட்டில் ஒன்றன் மீது மற்றொன்றாக 28 - 34 அறைகள் இருக்கும். இவற்றில் கருத்தரிக்கப்பட்ட முட்டைகள் இருக்கும். கூட்டின் பக்கவாட்டில் உள்ள பிளவு வழியாக கடல் நீர் உள்ளே சென்று வரும். இதன்மூலம் கருவுற்ற முட்டைகளுக்கு ஆக்சிஜன் கிடைக்கிறது. தமிழகத்தில் ராமேஸ்வரம் அருகேயுள்ள மன்னார் வளைகுடாவில் வெண் சங்கு, மாட்டுத் தலை சங்கு, தவளைச் சங்கு, வாழைப்பூ சங்கு, விநாயகர் சங்கு, ஐவிரல் சங்கு, தேள் சங்கு போன்ற வகைகள் உள்ளன.

